மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மத்திய அரசினுடைய மேற்பார்வை யின்கீழ் இருந்து வருகிற ஒன்று. மாநில அரசாங்கத்தின் கீழ் இருந்து வருகிற ஒன்றல்ல. ஆகவே, நம்முடைய தேவையைக் கேட்கவும் நம் தேவையை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கேட்கக் கூடிய அளவுக்குத் தான் மாநில அரசு அதோடு தொடர்பு கொள்ள முடியும். மாண்புமிகு உறுப்பினர் எடுத்துத் தெரிவித்த கருத்தினைப் பற்றி முடிவு செய்ய வேண்டிய முழுப் பொறுப்பும் மத்திய அரசைத்தான் சார்ந்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் நெய்வேலியில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதில் இது வரை எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா ? தமிழகத்தில் வேறு எங்கும் நெய்வேலி யிலுள்ளதுபோல் பழுப்பு நிலக்கரி இருப்பதாக ஆய்வு செய்யப்பட்டிருக் கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஆரம்பத்தில் நிபுணர்களுடைய குத்து மதிப்பான நிர்ணய அடிப்படையில் 200 கோடி டன் என்று இருக்கிறது. எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டது என்பது பற்றி அவர்களிடத்தில்தான் கேட்கவேண்டும். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் வாங்கி தரமுடியும். இப்பொழுது நெய்வேலியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் தான் கிடைப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. வேறு எங்கும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

Tamil in District Administration.

*111 *Q.*—THIRU K. VINAYAKAM : **Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :**

(*a*) Whether at the recent Conference at Tiruchirappalli the Collectors have expressed enthusiasm about the implementation of the use of Tamil as Official Language in the district administration ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் பொதுவான கருத்துக் களைத் தெரிவித்தார்கள். அவற்றின் மீது நடவடிக்கை எதுவும் தேவைப் படவில்லை.

திரு. கே. விநயகம் : மாவட்ட ஆட்சியிலே அவர்கள் அனுப்புகிற கடிதங்கள், அல்லது நாம் போடுகிற மனுக்கள் தமிழிலேயே இருந்தால் நல்லது என்று அவர்கள் கருத்து தெரிவித்திருந்தும் கூட, அங்கு நடக்கிற வழக்குகள், அவர்களுடைய "லெவலிலே" நடக்கிற வழக்கு களுக்கு—எங்களுக்கு—வக்கீல்களுக்கு வருகிற "சம்மன்ஸ்" நாங்கள் கொடுக்கிறபதில், பிறகு வருகிற ரிப்ளை இவைகள் எல்லாம் ஆங்கிலத்தில், தான் இன்னும் நடைமுறையில் இருக்கின்றன. அவற்றையும் தமிழிலேயே திருத்தியமைப்பதற்கு அவர்களுக்கு உத்தரவு அரசாங்கம் போடமுடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு நான்கு கட்டங்கள் வைத்திருக் கிறார்கள். முதல் கட்டம் தமிழிலேயே விண்ணப்பங்கள் மற்றவைகள் எழுதுவார்களானால், அதற்குப் பதில் அனுப்புவது தமிழிலே தான் இருக்க வேண்டுமென்பது. அடுத்த கட்டம், ஒரு அலுவலகத்திற்கும் மற்றொரு அலுவலகத்திற்கும் தொடர்பு கொள்ளுகின்ற பொழுது, அந்த கடிதங்கள் தமிழில் இருக்க வேண்டுமென்பது. மூன்றாவது கட்டம்,

துறைத் தலைவர் இருக்கிற அலுவலகத்திலிருந்து கீழ் சார்புடைய அலுவலகங்களோடு தொடர்பு கொள்ளுவது தமிழில் வரவேண்டுமென்பது. நான்காவது கட்டம் தலைமைச் செயலகத்தோடு தொடர்பு கொள்ளுவது தமிழில் அமைய வேண்டுமென்பது. சில இடங்களில் முதல் கட்டம் இரண்டாவது கட்டம், என்று வந்து, சில இடங்களில் மூன்றாவது கட்டம் என்று வந்திருக்கிறது. அதைப் படிப்படியாக மேற்கொள்ளுகின்ற முயற்சியிலேதான் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஊக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை விரிவுபடுத்துவதில் இடர்ப்பாடுகள் இருக்குமானால் அது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிப்பார்களானால் அதுபற்றி கவனிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாட்டிலே கூறப்பட்டது. இதற்கென்று 2, 3 அதிகாரிகள் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று அங்கே கடிதப் போக்குவரத்துக்களை தமிழில் எப்படி நடத்துகிறார்கள் என்பதை கண்டறிந்து அவர்களுக்குத் தக்க ஆலோசனைகளையும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அது பற்றி "ரிபபோர்ட்டு"களும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அது 40 சதவிகிதம், 45 சதவிகிதம், 50 சதவிகிதம் ஆகிக் கொண்டிருக்கிறது. என்று கணக்கெடுத்து இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் மெல்ல மெல்ல எடுக்கப்பட்டு வருகின்றன. நாளாவட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து நடை முறைக்கு வருவதற்கு வழிவகைகள் செய்யப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்தில் தமிழ் இடம் பெற வேண்டுமென்ற கொள்கை வலியுறுத்தப்பட்டு வருகின்ற நேரத்தில் செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டங்களைப் போன்ற கூட்டங்களினால் கலந்துகொள்ளுகின்ற சட்ட மன்ற உறுப்பினர்களே ஆங்கிலத்திலே பேசுகிறார்களே........(மணி அடிக்கப்பட்டது).

திரு. கரு. ராம. கரிய மாணிக்கம் அம்பலம் : சார், பஞ்சாயத்து யூனியன் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களிலே தமிழை நடைமுறையிலே கொண்டு வருவதிலே ஒரு கஷ்டமும் இல்லை. ஆகவே, உடனடியாக, பஞ்சாயத்து யூனியன் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களிலே எல்லா நடைமுறைகளையும் தமிழிலேயே நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து எந்த அளவு நடைமுறையில் இருக்கிறது என்று பார்த்து அதை மேலும் தீவிரப்படுத்துவதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

திரு. கே. போஜன் : மாவட்ட நிர்வாகத்தில், நம்முடைய தமிழ் மொழியுடன் ஆங்கிலமும் இருக்க இவ்வரசு வழி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ், ஆங்கிலம் இரண்டும் சேர்ந்து தான் இருக்க வேண்டும். கூடுமான வரையில் ஆங்கிலத்தினுடைய இடத்தைத் தமிழ் பற்றிக் கொள்ள வேண்டுமென்பது தான் கொள்கை. அறியாதவர்கள், தெரியாதவர்கள், தமிழ் புரியாதவர்களுக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படும்.

திரு. செஞ்சி. வெ. முனுசாமி : தலைவர் அவர்களே, தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்களையே மாவட்ட ஆட்சித் தலைவர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களாக வருகிறவர்கள் தமிழ் அறிந்தவர்களாக இருக்க வேண்டும். தமிழர் அல்லாதவர்களாக இருந்தாலும் அவர்கள் தமிழ் அறிந்தவர்களாக இருந்து, நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறோம். அப்படி தமிழர்களாக இல்லாதவர்கள் கூட பொதுக் கூட்டம், மற்றும் கூட்டங்களில் பேசுகின்ற பொழுது, தமிழிலே பேசுவதும் தமிழிலே நடத்துவதுமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

1968 மார்ச்]

திரு. செ. பால்சுப்பிரமணியன் : இந்த இலாக்காக்களுடைய கடிதப் போக்குவரத்துக்கள் இவை எல்லாம் ஒருபுறமிருக்க, பொதுமக்களோடு தொடர்பு கொள்ளுகின்ற காரியங்களிலாவது, அடுத்த நிதியாண்டிலிருந்தே தமிழில் காரியங்களை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் ; பொது மக்களிடமிருந்து தமிழிலே வருகின்றவைகளுக்கு தமிழிலேயே எழுதவேண்டுமென்று கட்டாயப் படுத்தப்பட்டு இருக்கிறது. அவர்கள் ஆங்கிலத்திலே எழுதுகின்ற பொழுது, ஆங்கிலத்திலேயே கேட்கின்ற பொழுது, கூடுமான வரையில் ஆங்கிலத்தில் தர வேண்டும், இல்லாவிட்டால் தமிழிலே தரலாம் என்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சாதாரணமாக பொதுமக்களிடத்திலே ஒரு எண்ணம் இருக்கிறது. அது விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் இருந்தால் தான் நல்லது என்று. தமிழ் அறிந்தவர்கள் கூட ஆங்கிலம் தெரிந்தவர்களிடம் சென்று தட்டெழுத்தின் மூலம் தட்டெழுத்தாக்கி வைக்க வேண்டுமென்று முயன்று செய்கிறார்கள். ஆகவே, பொதுமக்கள் இனிமேல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களோடு தொடர்பு கொள்ளுகின்றபொழுது தமிழிலேயே தொடர்பு கொள்ளலாம், தமிழிலேயே விண்ணப்பம் எழுதுகின்ற முயற்சியினைக் கொள்ள வேண்டுமென்ற நிலை ஏற்படும் பொழுது, தமிழிலேயே தொடர்பு கொள்ளலாம், தொடர்பு கொள்ளவேண்டுமென்ற வழி ஏற்படும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, தமிழை பயிற்சி மொழியாகவும், நீதி மொழியாகவும், கல்லூரி மொழியாகவும், வைத்திருக்கக்கூடிய நமது அரசு, இன்றைக்கு நகரசபைகள், பஞ்சாயத்து போர்டு, சர்க்கார் அலுவலகங்கள் இவைகளில் தொடர்ந்து தமிழிலே கடிதப் போக்குவரத்து நடத்துவதற்கு உண்டான ஏற்பாடுகளை இதுவரையில் இல்லாவிட்டாலும், இனிமேலாகிலும் துரிதமாகச் செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் ; நான் முன்பு கூறியபடி நான்கு கட்டங்களிலே படிப்படியாக, அடுத்தடுத்து, முதல்படி, இரண்டாம் படி, மூன்றும் படி, நான்காம் படி, என்ற முறையில் ஆங்காங்கு ஏற்று நடத்துவதற்கான முயற்சி அதிகமாக ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட நிலையில் தலைமைச் செயலகத்தில் செய்தித் துறையில் எல்லாவற்றையும் தமிழிலேயே நடத்துவதற்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அங்கே கோப்புகள் கடிதப் போக்குவரத்துகள் தமிழிலே ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போன்று ஆட்சிமொழிக் குழுத் துறையும் தலைமைச் செயலகத்தில் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல துறைகளில் தமிழை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

Thiru B. VENKATASWAMY : Hon. Deputy Speaker, Sir, may I know from the Hon. Minister for Education and Industries whether the Government will come forward to introduce minority languages in the offices located in some districts where 30 to 40 per cent of the people are minorities ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறுபான்மையோர் தங்களுடையதாய் மொழியை பயில்வதற்கு வசதியையும், வாய்ப்பும் செய்து தரப்படும். ஆனால் அரசாங்க நடவடிக்கைகள் தமிழிலேயும், ஆங்கிலத்திலேயும் தான் இருக்குமே தவிர சிறுபான்மையோர்களாக இருக்கிறவர்களுடைய மொழியில் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படாது. பள்ளிகளில் சிறுபான்மையோர் தங்களுடைய தாய் மொழியில் பயில, கற்றுக்கொள்ள, அதிலே திறமை பெற வசதிகள் சிறுபான்மையோர்களுக்கு ஏற்படுத்தித் தரப்படும்.

திரு. கே. விநாயகம் : மாவட்ட ஆட்சி அலுவலகங்கள் தமிழிலேயே தான் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் பொதுவாக இருந்தாலும் கூட, அங்கு வைத்திருக்கிற தஸ்தாவேஜுகள் (ரிகார்ட்ஸ் அண்டு ஃபைல்ஸ்), கட்டுகள்—(குறுக்கிடு) அவைகளை கட்டுகள் என்று சொல்வது சரியான மொழிபெயர்ப்பு அல்ல என்று கூறலாம்—ஆனால் மோப்பு, கோப்பு என்றெல்லாம் சொல்லிக் குழப்பதை உண்டாக்குகிறார்களே—அங்கெல்லாம் வைத்திருக்கிற ரெகார்டுகளெல்லாம் இன்னும் ஆங்கிலத்தில் தான் இருக்கிறதே தவிர, தமிழிலே வராததற்கு காரணம், அதற்கென்று தயார் செய்யப்பட்ட கிளாஸரி, ஆங்கில சொற்களை தமிழிலே மொழிபெயர்த்து எல்லோரும் அதைப் பயன்படுத்த வேண்டும் என்று தயாரிக்கப்பட்ட அந்த தொகுப்பு அனைவருக்கும் இன்னும் தெரியாத காரணத்தினால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பொருள் தந்து, பல பேர்கள் பலவிதமாக மொழி பெயர்ப்பதால் வரும் சிக்கல் தான் இது. ஆதலால் இவைகளை மெல்ல மெல்ல எல்லோரும் அனுபவத்திலே பயன் படுத்துகிற அளவுக்கு மெல்ல மெல்ல வேண்டியவைகளை அரசாங்கம் செய்யுமா ? அல்லது திடீரென்று புகுந்து தொல்லை கொடுத்து, ஒரு தெளிவான நிலைமை இல்லாமல் இருக்கும்படி வைத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் கேட்ட கேள்வியில் இதைத் தீவிரப்படுத்துவார்களா, நடைமுறைக்கு வருமா என்று கேட்டார்கள். இப்பொழுது மெல்ல மெல்ல கொண்டுவருவார்களா என்கிறார்கள். ஆங்கிலத்தில் அவைகள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். தமிழிலே மொழி பெயர்ப்பதிலே குழப்பம் ஏற்படுகிறது என்றும் கூறுகிறார்கள். ஆகவே, " டிரான்ஸிஷன் பீரியட் " என்று சொல்லக்கூடிய, மாற்றம் ஏற்படக்கூடிய நிலைமைகளில் சிலபல சங்கடங்கள் இருக்கத்தான் செய்யும். சிலபல வார்த்தைகளுக்கு சிலபல சொற்கள் பயன்படுத்தப்படும். ஆனால், சில காலம் சென்ற பிறகு பழக்கத்தில் ஏதேனும் ஒரு சொல் ஒரு குறிப்பிட்ட பொருளைத்தான் குறிக்கும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். உதாரணமாகச் சொல்லப்போனால், "டைரக்டர்" என்ற ஆங்கில சொல்லுக்கு நெறியாளர், இயக்குநர் என்ற இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் நெறி என்பது, நெறிப்படுத்துவது என்பது, ஒரு தத்துவம் என்ற கொள்கை அடிப்படையில் வருகிற ஒன்றாகும். ஆகவே, நெறியாளர் என்ற சொல் தெளிவாக டைரக்டர் என்று பொருள் படாது. டைரக்டர் என்ற சொல்லுக்கு இயக்குநர் என்ற சொல்லையே பயன்படுத்தலாம் என்று ஆட்சி மொழிக் குழுத் துறை அறிவித்திருக்கிறது. பழக்கத்தில், மெல்ல, மெல்ல சரியான சொற்கள் நடைமுறைக்கு வந்துவிடும். கமிஷனர் என்ற சொல்லுக்கு ஆணையாளர் என்ற சொல்லை ஆரம்ப காலத்தில் எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை என்றாலும், இப்பொழுது ஆணையாளர் என்ற சொல் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வரக்கூடிய நிலைமையில் சீராக வந்துவிட்டது. அது போலத்தான் தபால் ஆபீஸ் என்பதற்கு அஞ்சல் நிலையம் என்ற சொல் பழக்கத்திற்கு வந்துவிட்டது. என்ஜினியர், என்ற சொல்லுக்கு பொறியர் என்று சொன்னபொழுது, பொரியலா, வறுவலா என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த காலம் மாறி, இப்பொழுது பொறியர் என்ற சொல் மக்களால் பழக்கத்தில் வழங்கப்படுகிறது. " சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் " என்று கூறியது போல், பழக பழகத் தமிழிலே சொற்கள் நடைமுறைக்கு வந்து விடும். அப்படி நடை முறைக்கு மெல்ல மெல்ல வர வர தமிழுக்கு மெருகு ஏறி, பொலிவு ஏறும் நிலைமை வந்து கொண்டிருக்கிறது. மேற்கொண்டு ஆங்காங்கு இதை விரிவு படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறபடி மாவட்ட ஆட்சித் துறை முழுவதும் தமிழிலேயே நடை பெற வழிவகை செய்யப்படும். மாவட்ட ஆட்சித் துறையில் நல்ல தமிழ் ஆர்வம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஏற்கெனவே ஆட்சித் துறையில் இருந்தவர்கள் ஐந்தாவது வரை தமிழ் படித்து, அதற்குமேல் ஆங்கிலம் படித்த காரணத்தினால் ஆட்சி தமிழிலே நடை பெறுவதை அதிகம் எதிர்பார்ப்பதற்கு இல்லாமல் இருந்தது. ஆனால் எதிர்காலத்தில் நம்பிக்கையூட்டும் வகையிலே, தமிழ் ஆர்வம்

உள்ளவர்களும், ஆங்கில அறிவு உள்ளவர்களும் அதிகாரிகளாக பல பேர்கள் மாவட்ட ஆட்சித் துறையிலே பணிபுரிந்து வருவதால், இதை மேலும் விரிவுபடுத்துவதற்கான முயற்சியில் வேகமாக நிச்சயம் ஈடுபடுவார்கள் என்று நாம் நினைக்கலாம்.

நகர பஸ்கள்

* 112 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூரிலிருந்து மைலாப்பூர் செல்வதற்கு இரவு 10 மணி வரை அரசாங்க பஸ்கள் விடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எழும்பூரையும் மைலாப்பூரையும் இணைக்கும் பேருந்துகள் தற்போது இரவு 10 மணிக்குப் பின்னும் ஓட்டப்படுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: தற்பொழுது பேருந்துகள் இரவு எத்தனை மணி வரையில் ஓடுகின்றன ? காலையில் எத்தனை மணிக்கு ஓட ஆரம்பிக்கின்றன ? இந்த நேரத்தை அதிகப்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரவு 10 மணிக்கு மேல் ஓடும் பேருந்துகள் தியாகராய நகரிலிருந்து பாரிமுனைக்கும், பாரிமுனையிலிருந்து தியாகராய நகருக்கும் ஓடுகின்றன. இரவு 12½ மணிக்கு தியாகராய நகரிலிருந்து புறப்படுகிறது. பாரிமுனையிலிருந்து இரவு 1-10-க்கு புறப்படுகிறது. கிண்டியிலிருந்து 10-45-க்கு புறப்படுகிறது. பாரிமுனையிலிருந்து 11–10 மணிக்கு புறப்படுகிறது. தியாகராயநகரிலிருந்து இரவு 10-50-க்கு புறப்படுகிறது. பெரம்பூரிலிருந்து இரவு 11-43-க்கு புறப்படுகிறது. 38-எ என்ற எண்ணுள்ள பேருந்து பாரிமுனையிலிருந்து 1-05-க்கு புறப்படுகிறது. மூலக் கடையிலிருந்து 12-30-க்கு புறப்படுகிறது. விவேகாநந்தா இல்லத்திலிருந்து 12-59-க்கு புறப்படுகிறது. திரு. வி.க. நகரிலிருந்து 12-05-க்கு புறப்படுகிறது. பிராட்வேயிலிருந்து 10-20-க்கு புறப்படுகிறது. அம்பத்தூரிலிருந்து 11-35-க்கு புறப்படுகிறது.

* 113 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழைய மாம்பல வாசிகளின் வசதிக்காக நேரிடையாக பழைய மாம்பலத்திற்கும் டவுனுக்கும் போக வர பஸ் விட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பழைய மாம்பல வாசிகள் தியாகராய நகருக்கு 49-ஆம் எண் பேருந்துகளில் வந்து அங்கிருந்து புறப்படும் வண்டிகளில் ஜார்ஜ் டவுனுக்கோ அல்லது நகரத்தில் மற்றப் பகுதிகளுக்கோ போகலாமாதலால் பழைய மாம்பலத்திலிருந்து நகரத்திற்கு நேரிடை வண்டி விடும் உத்தேசமில்லை. மேலும் பழைய மாம்பலத்திலுள்ள சாலைகள் மிகவும் குறுகலாயிருப்பதால் அவைகளில் அதிக வண்டிகள் செல்ல முடியாது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பழைய மாம்பலத்திலிருந்து டவுனுக்குப் போகும் பஸ் பற்றிய கேள்வி இது. ஆகவே, அது பற்றி துணைக் கேள்விகள் கேட்கவேண்டும் திரு. கொளத்தூர் கோதண்டம்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு சென்னை நகரில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட வழித்தடங்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த விவரம் இப்பொழுது இல்லை. மூலக் கேள்வியில் இது இடம் பெறவில்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.